بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *17/03/2023* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் [அலை] அவர்களின் ஞானம் மிகு வழிகாட்டல்களின் ஒளியில் திருக்குர்ஆனின் அருள்கள், அந்தஸ்து, தகுதி மற்றும் மகிமை பற்றிய எடுத்துரைப்பு**
**பாக்கிஸ்தான், புர்கினாஃபாஸோ மற்றும் பங்களாதேஷ் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுமாறு ஜமாஅத் மக்களுக்குத் தொடர்ச்சியான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

கடந்த சில வாரங்களாக திருக்குர்ஆனின் அந்தஸ்து, மேன்மை மற்றும் அழகு பற்றி குறிப்பிடப்பட்டு வருகின்றது. திருக்குர்ஆனைப் பொறுத்தவரை மார்க்கத்தின் நோக்கம் என்ன? மேலும், மனித ஆற்றலின் மீது அதன் ஆதிக்கம் என்னவாக இருக்கிறது? என்னவாக இருக்க வேண்டும்? என்பதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இதற்கான எந்த ஒரு பதிலையும் இன்ஜீல் கொடுக்கவில்லை. ஏனென்றால், இன்ஜீல் நுட்பமான வழிமுறைகளை விட்டும் தொலைவில் உள்ளது. ஆனால், திருக்குர்ஆன் மிக விளக்கமாக மீண்டும் மீண்டும் இந்த விஷயத்திற்குத் தீர்வு வழங்குகியவாறு கூறுகிறது. மார்க்கத்தின் நோக்கம் மனிதர்களின் இயல்பான ஆற்றலை மாற்றி, ஓநாயை ஆடாக மாற்றிக் காண்பிப்பது அல்ல; அதாவது, வலிமை வாய்ந்தவர்களை பலவீனமாக ஆக்கிக் காட்டுவது அல்ல. மாறாக, மனிதனுக்குள் இருக்கின்ற இயல்பான ஆற்றல், திறமை, தகுதி மற்றும் வலிமைகளை சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப பயன்படுத்துவதன்பால் வழிகாட்டுவதே மார்க்கத்தின் நோக்கமாகும். மேலும், எந்த ஓர் இயல்பான ஆற்றலையும் மாற்ற மார்க்கத்திற்கு அதிகாரம் இல்லை. மாறாக, அதனை அதற்குரிய இடத்தில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டுவதற்கான அதிகாரம் இருக்கின்றது. ஓர் ஆற்றல் மீது மட்டுமே அழுத்தம் கொடுக்காமல், அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவதற்காக அறிவுரை கூறுவதே மார்க்கத்தின் நோக்கமாகும். உண்மையான நோக்கம், சீர்திருத்தமும் மேம்பாடுமே ஆகும். மேலும், இந்த நோக்கத்தை எவ்வாறாவது நிறைவேற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: முஸ்லிம்கள் திருக்குர்ஆனை முற்றிலும் புரிந்து கொள்வதில்லை என்பது உண்மையிலேயே சரியான விஷயமாகும். ஆனால், திருக்குர்ஆனின் சரியான பொருளை வெளிப்படுத்துவதே தற்போது இறைவனது நோக்கம் ஆகும். இறைவன்

என்னை இதற்காகவே நியமித்திருக்கின்றான். மேலும், அவனது இல்ஹாம் மற்றும் வஹீ மூலமாக நான் திருக்குர்ஆனைப் புரிந்து கொள்கின்றேன். திருக்குர்ஆனின் போதனை எத்தகையது என்றால், அதன் மீது எந்த ஆட்சேபனையும் வர முடியாது. மேலும், எந்த அளவுக்கு அறிவுப்பூர்வமான விஷயங்களால் நிரம்பியுள்ளது என்றால், ஒரு தத்துவவாதியாலும் ஆட்சேபனை செய்ய முடிவதில்லை.

பிறகு, திருக்குர்ஆனின் மேன்மையை எடுத்துரைத்தவாறு அன்னார் ஜமாஅத்துக்கு அறிவுரை கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை ஆழ்ந்து சிந்தியுங்கள். அதில் நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்த விளக்கங்கள் உள்ளன. மேலும், எதிர்காலம் பற்றிய செய்திகள் உள்ளன. இது எப்படிப்பட்ட மார்க்கத்தை எடுத்து வைக்கின்றது என்றால், அதன் மீது எந்த ஓர் ஆட்சேபனையும் எழ முடியாது. ஏனென்றால், அதன் அருள்களும் கனிகளும் புத்தம் புதிதாக கிடைக்கின்றன. அல்லாஹுத்தஆலா அனைத்து நோய்களுக்குமான சிகிச்சையை அதில் கூறி இருக்கின்றான். அனைத்து ஆற்றல்களையும் நெறிபடுத்தும் வழிமுறையைக் கூறி இருக்கின்றான். மேலும், வெளிப்பட்டுள்ள தீமையைக் களைவதற்கான வழிமுறையையும் கூறி இருக்கின்றான். இந்த பெருமை திருக்குர்ஆனையே சாரும். எனவே, திருக்குர்ஆனை ஓதிக் கொண்டேயிருங்கள். துஆ செய்து கொண்டேயிருங்கள். மேலும், உங்களுடைய செயல்பாடுகளை அதன் போதனைகளின் கீழ் வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.

திருக்குர்ஆனைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதன் பால் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: சடங்கு சம்பிரதாயங்களில் இருந்து விலகி இருப்பது சிறந்ததாகும். இதனால், சிறிது சிறிதாக ஷரீஅத்தில் மாற்றங்கள் ஆரம்பமாகி விடுகின்றன. அவர் இப்படிப்பட்ட செயல்களில் செலவழிக்கின்ற நேரத்தைத் திருக்குர்ஆனைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதில் செலவழிக்க வேண்டும்.

பித்அத்துகளில் இருந்து நாம் தவிர்ந்திருக்க வேண்டும். மேலும், திருக்குர்ஆனின் மொழியாக்கம் மற்றும் விளக்க உரையைப் படிப்பதன் பால் அதிக கவனம் செலுத்த வேண்டும். அடுத்த வாரம் ரமலானும் ஆரம்பமாகின்றது. எனவே, இந்த ரமலானில் குறிப்பாக நாம் திருக்குர்ஆனை ஓதுவது, கற்பிப்பது மற்றும் புரிந்துகொள்வது ஆகியவற்றிற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனை அடிக்கடி ஓதுவதே உள்ளத்தின் கடினத்தை மென்மை ஆக்குவதற்கான வழிமுறையாகும். எங்கெல்லாம் துஆ இருக்கின்றதோ அங்கெல்லாம் இறைவனின் இந்த கருணை தம் மீதும் ஏற்பட வேண்டும் என்று நம்பிக்கையாளரின் உள்ளமும் நாடுகின்றது. திருக்குர்ஆனின் உதாரணம் ஒரு தோட்டத்தைப் போன்றதாகும். ஓர் இடத்திலிருந்து மலரைப் பறிக்கிறார். பிறகு முன்னே சென்று வேறு வகையான மலரைப் பறிக்கிறார். எனவே, இடத்திற்குத் தகுந்தாற்போல் பயனடைய வேண்டும். ஏவப்பட்ட மற்றும் தடுக்கப்பட்ட கட்டளைகளை மனிதன் மேற்கொண்டு, அல்லாஹுத்தஆலா வழங்கிய கட்டளையை செய்ய வேண்டும். எதனைத் தடுத்துள்ளானோ அவற்றிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதனால் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படுகின்றது. இவைதான் மனிதன் அந்தத் தோட்டத்தில் பறிக்கின்ற மலர்களாகும்.

சஹாபா பெருமக்கள் நபிமொழிகளைத் திருக்குர்ஆனை விட குறைந்த அந்தஸ்துடையவையாக கருதினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

கூறினார்கள்: நபிமொழிகள் பிறகே ஒன்று திரட்டப்பட்டன என்றாலும், சில சமயங்களில் சில சஹாபிகள் (நபிமொழிகளை) எழுதியும் வந்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு விவகாரத்திற்குத் தீர்ப்பு வழங்க முனைந்தார்கள். அப்போது ஒரு மூதாட்டி நபிமொழியில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்று கூறினாள். ஆனால், ஒரு மூதாட்டிக்காக அல்லாஹ்வின் வேதத்தை விட்டு விட முடியாது என்று அன்னார் கூறினார்கள்.

ஆக, உண்மை இதுவேயாகும். இதனையே நாமும் மேற்கொள்ள வேண்டும். இது இல்லை என்றால், பித்அத்துகள் பரவிக் கொண்டே செல்லும். இதன் காரணத்தினால்தான் முஸ்லிம்களிடையே பித்அத்துகள் பரவிக்கொண்டே செல்கின்றன. மேலும், திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளில் இருந்து விலக்கிக் கொண்டே செல்கின்றன. முஸ்லிம் பொதுமக்களில் பெரும்பான்மையினர் அறியாதவர்கள் ஆவர். பெயர்தாங்கி ஆலிம்கள் அவர்களை எந்தப் பக்கம் கொண்டு செல்கிறார்களோ அந்தப் பக்கமே அவர்கள் செல்லத் தொடங்குகிறார்கள். மேலும், பித்அத்துகள் பரவிக் கொண்டே செல்கின்றன. ஆனால், அவ்வாறு இருந்தும் நாம் திருக்குர்ஆனில் மாற்றம் செய்கிறோம் என்று நம் மீது ஆட்சேபனை உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: முஸ்லிம்கள் திருக்குர்ஆனை முழுவதுமாக பின்பற்றி நடக்காத வரை அவர்கள் எவ்வித முன்னேற்றத்தையும் பெற முடியாது.

அன்னார் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் ரத்தினங்களின் பை ஆகும். ஆனால், மக்கள் அதனை அறியாதவர்களாக இருக்கிறார்கள். மக்கள் உத்வேகத்துடனும் ஈடுபாட்டுடனும் திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை என்பது கவலைக்குரிய விஷயம் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் சான்றுகளைக் கொண்டு விளக்கும் வகையில் இருக்கின்றது. வலுவான, உறுதியான ஆதாரங்களை வழங்காத எந்த ஒரு விஷயத்தையும் அது எடுத்துரைக்கவில்லை. திருக்குர்ஆனின் சொற்செறிவு தன்னகத்தே ஓர் ஈர்ப்பினை கொண்டிருப்பதைப் போன்று, அதன் போதனைகள் அறிவார்ந்ததாகவும் ஈர்க்கக் கூடியதாகவும் இருப்பதைப் போன்று, அதன் ஆதாரங்களும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாக உள்ளன. எனவே, வேறு எந்த வேதமும் திருக்குர்ஆனுடன் போட்டியிட முடியாது. திருக்குர்ஆனை ஓதும் போதும், திருக்குர்ஆனில் ஏதேனும் விஷயத்தைக் கண்டால், அங்கேயே அதன் ஆதாரத்தையும் தேடுங்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! நாம் எப்படிப்பட்ட திருக்குர்ஆனை எடுத்து வைக்கின்றோம் என்றால், அதைக் கண்டு மாய மந்திரமும் வெருண்டோடுகிறது. அதற்கு எதிராக எந்த ஒரு பொய்யும், மாய மந்திரமும் நிற்க முடியாது. திருக்குர்ஆன் எப்படிப்பட்ட மகத்துவமிக்க ஓர் ஆயுதம் என்றால், அதற்கு நிகராக எந்த ஒரு பொய்க்கும் நிற்கவே தைரியம் இருக்க முடியாது. இது விண்ணின் ஆயுதமாகும். இது ஒருபோதும் மழுங்கி விடாது. எனவே, நாம் திருக்குர்ஆனை ஆழ்ந்து சிந்திப்பதன் பாலும் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் நம்மால் நமது ஆன்மீக மற்றும் அறிவு நிலையை மேம்படுத்தவும் முடியும்; எதிரிகளுக்கு மறுப்பு தெரிவிக்கவும் முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் கண்ணியத்திற்குரிய வேதமாகும். அது சமுதாயங்களிடையே சமாதானத்திற்கான அடித்தளமிட்டுள்ளது. மேலும் அனைத்து சமுதாயங்களின் தூதர்களையும் ஏற்றுக் கொண்டது. உலகம் முழுவதிலும் இந்தப் பெருமை திருக்குர்ஆனுக்கே உரித்ததாகும். அது لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ ۫ وَنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ என்ற போதனையை வழங்கியுள்ளது. அதாவது, முஸ்லிம்களே! 'நாங்கள் உலகின் அனைத்து நபிமார்கள் மீதும் ஈமான் கொண்டுள்ளோம்; அவர்களில் எவர்களிடையேயும் பாகுபாடு கொள்வதில்லை; சிலரை ஏற்று சிலரை மறுப்பதில்லை' என்று கூறுங்கள். இப்படிப்பட்ட சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய வேறு வேதம் ஏதும் இருந்தால் அதன் பெயரைக் கூறுங்கள் என்று அன்னார் சவால் விடுத்துள்ளார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் எப்படிப்பட்ட வேதம் என்றால், அதனைப் பின்பற்றுவதால் இவ்வுலகிலேயே இரட்சிப்புக்கான அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அதனுடைய கூற்று எவ்வளவு ரத்தினச் சுருக்கமாகவும் ஆழ்ந்த ஞானம் உள்ளதாகவும், உண்மைகளைத் தாங்கியுள்ளதாகவும் இருக்கின்றது என்றால், இறைவனைச் சென்றடைவதில் தடைகளாக உலகில் இருக்கின்ற அனைத்து சந்தேகங்களுக்குமான மறுப்பு அறிவுப்பூர்வமாக அதில் இடம்பெற்றுள்ளது. திருக்குர்ஆன் நம்பகமான மற்றும் உறுதியான வேதமாகும். அது சந்தேகங்கள் மற்றும் யூகங்கள் ஆகிய அசுத்தங்களில் இருந்து தூயதாக உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இறைவன் ஆரம்பத்தில் தனித்தனியாக ஒவ்வொரு சமுதாயத்திற்கும் வெவ்வேறான சட்டதிட்டங்களை அனுப்பினான். பிறகு இறைவன் ஒருவன் ஆக இருப்பதைப் போன்று, அவைகளும் ஒன்றாகி விட வேண்டும் என்று நாடினான். அப்போது அனைத்து மக்களையும் ஒன்று திரட்டுவதற்காக திருக்குர்ஆனை அனுப்பினான். திருக்குர்ஆன் முந்தைய வேதங்கள் மற்றும் நபிமார்கள் மீது பேருபகாரம் செய்துள்ளது. கதைகளின் வடிவில் இருந்த அவற்றின் போதனைகளுக்கு அறிவு வடிவத்தை வழங்கியது. எந்த ஒரு மனிதரும் திருக்குர்ஆனை ஓதாத வரை இந்தக் கதைகளால் (மட்டும்) இரட்சிப்பை அடைய முடியாது. திருக்குர்ஆனை ஓதிவிட்டு அதனை கதை என கருதுகின்றவர்கள் அதற்கு அவமரியாதை செய்துள்ளார்கள். திருக்குர்ஆன் முழுக்க முழுக்க ஒளியாகவும், தத்துவமாகவும், ஞானமாகவும் உள்ளது என்று நாம் உலகிற்குக் காண்பிக்க நாடுவதால்தான் நமது எதிரிகள் நமக்கு எதிராக கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார்கள். திருக்குர்ஆன் ஓர் உயிருள்ள, ஒளிமிக்க வேதமாகும் என்பதை இறைவன் தனது அருளால் நமக்குத் தெளிவுபடுத்தி விட்டான். எனவே, நாம் அவர்களது எதிர்ப்பை ஏன் பொருட்படுத்த வேண்டும்?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனில் எத்தகைய மகத்துவம் வாய்ந்த ஞானங்கள் உள்ளனவென்றால், அவற்றைத் தவ்ராத்திலும் இன்ஜீலிலும் தேடுவது வீணானதாகும்.

எனவே, இறை வேதத்தின் அழகு நமக்குத் தெரிய வருவதற்காக அதன் பொருள் மற்றும் அர்த்தங்களை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் பழக்கத்தை ஒவ்வொருவரும் ஏற்படுத்த வேண்டும்.

அன்னார் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஏவல்கள் மற்றும் தடுக்கப்பட்டவைகள் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன.

ஓதும் போது, அவற்றைத் தேட வேண்டும். மேலும், அவற்றைத் தம் வாழ்வின் அங்கமாக ஆக்க வேண்டும். அப்போதுதான் நாம் இறை வேதத்தில் இருந்து உண்மையான பலனை பெற முடியும். திருக்குர்ஆனில் அனைத்தும் உள்ளன. ஆனால், (அகப்) பார்வை இல்லாத வரை எதனையும் பெற முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் ஞானங்களின் கருவூலமாகும். உலகின் அருள்களும் அதனுடனேயே வருகின்றன. இதற்காகவே அல்லாஹ் நபிமார்களை அனுப்பியுள்ளான். மேலும், உலகம் இறுதி வேதத்தின் தாக்கங்களைப் பெற்று பாதுகாப்பு பெறுவதற்காகவே அ(ந்த இறுதி வேதத்)தை இறக்கினான். எனவே, ஒவ்வோர் அஹ்மதியின் பணி என்னவென்றால், திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப தன் நிலையை அமைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்வதுடன், உலகிற்கும் அதன் போதனைகளைப் பற்றித் தெரியப்படுத்த வேண்டும். மேலும், ஆன்மீக மற்றும் பௌதீக அழிவில் இருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள். திருக்குர்ஆன் காத்தமுல் குதுப் ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்து காண்பித்தவற்றையும், திருக்குர்ஆன் போதித்தவற்றையும் விட்டுவிட்டு இரட்சிப்பைப் பெற முடியாது. இது நமது கொள்கையும் கோட்பாடும் ஆகும். இவ்விஷயம் முஸ்லிம் பொதுமக்களுக்கும் புரிந்து, அவர்கள் காலத்தின் இமாமை அறிந்து கொள்பவர்களாக ஆகி விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

ஜுமுஆ பேருரையின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பாகிஸ்தான், புர்கினாஃபாஸோ மற்றும் பங்களாதேஷின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும், நாட்டின் பொதுவான சூழ்நிலைக்காகவும் துஆ செய்யுங்கள். புர்கினாஃபாஸோவின் அஹ்மதிகளுக்காகவும் நாட்டின் பொதுவான சூழ்நிலைக்காகவும் துஆ செய்யுங்கள். பங்களாதேஷின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹுத்தஆலா அவர்களையும் பாதுகாப்பாக வைப்பானாக. அங்கு இன்று மீண்டும் மவ்லவிகள் கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்த இருந்தார்கள். உலகில் எந்த நாடுகளில் எல்லாம் அஹ்மதிகள் இருக்கின்றார்களோ அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ரமலான் தொடர்பாக, துஆவின் பால் குறிப்பாக கவனமூட்டியவாறு கூறினார்கள்: தற்போது ரமலானும் ஆரம்பமாக உள்ளது. நான் கூறியது போன்று, திருக்குர்ஆனை ஓதுவதன் பாலும் புரிவதன்பாலும் கவனம் செலுத்தும் அதே வேளையில் துஆவின்பாலும் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். அல்லாஹுத்தஆலா நம் அனைவருக்கும் அதற்கான நல் வாய்ப்பையும் நல்குவானாக! ரமலானின் அருளிலிருந்து பலன் பெறும் நல் வாய்ப்பை வழங்குவானாக! (ஆமீன்)

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ
وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي
الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)